அருப்புக்கோட்டை பஸ் நிலையத்திலே சென்று பார்த்தால் நாம் 71-லே தமிழ்நாட்டிலேதான் இருக்கிறோமா என்ற ஐயப்பாடு தான் வருகிறது. அந்த பஸ் சொந்தக்காரர்கள் காட்டு தர்பார் நடத்திக் கொண்டு பயணிகளைக் கொடுமையாக நடத்திக்கொண்டு வருகிறார்கள். மதுரையிலிருந்து அருப்புக்கோட்டைக்கு 30 மைல் தூரம்தான். அதற்கு அவர்கள் போட்டிருக்கிற நேரம் ஒரு மணி முப்பது நிமிடம்தான். ஆனால் அவர்கள் இரண்டேகால் மணி நேரம் எடுத்துக்கொள்கிறார்கள். அதேபோன்று அருப்புக் கோட்டை-புதூர் 15 மைல் தூரம்தான். அதற்காக ஒதுக்கப் பட்டுள்ள நேரம் 52 நிமிடம்தான். ஆனால் அவர்கள் ஒன்றரை மணி நேரம் எடுத்துக்கொண்டு வேண்டுமென்றே செய்கிறார்கள். அதன் காரணமாகப் பொதுமக்கள் அவதிக்குள்ளாகியிருக் கிறார்கள். விளாத்திகுளத்திலிருந்து மதுரைக்குப் போகவேண்டு மென்றால் 52 மைல் தூரம் இருக்கிறது. அதற்கு பஸ் விட்டு பஸ் மாறிப் போகவேண்டிய நிலைமை இருக்கிறது. 6 மணி நேரம் ஆகிறது. திருச்செந்தூரிலிருந்து மதுரைக்கு விளாத்திகுளம் வழியாக, தூத்துக்குடி வழியாக பஸ் போக்குவரத்து அரசின் சார்பாக உடனடியாக ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

## (4) அமைச்சரின் அறிக்கை

**காவிரி நீர்ப் பங்கீடுபற்றி தமிழ்நாடு முதலமைச்சருக்கு இந்தியத் தலைமை அமைச்சரிடமிருந்து வந்துள்ள கடிதம் பற்றி முதலமைச்சரின் அறிக்கை.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டப் பேரவை விதி 82-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை யைச் சமர்ப்பிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் காவிரி நீர் பங்கீடு பற்றி ஒருமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அந்தத் தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதையொட்டி இந்தியத் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் எனக்கு எழுதியுள்ள கடிதத்தை இந்த அவையில் வைப்பது பொருத்தம் என்று கருதி, தங்கள் அனுமதியோடு இந்த அவையில் இதனைப் படிக்கிறேன்.

New Delhi,
July 19th.

Dear Thiru Karunanidhi,

I have seen the Resolution of the Legislative Assembly and the Legislative Council of Tamil Nadu. I do appreciate the deep feelings of the people of Tamil Nadu which have been voiced by you and the Legislature. I am conscious of the need to ensure that the Legitimate rights of the farmers of Tamil Nadu

are fully protected. This matter has been dragging on for quite some time. You will appreciate that in the present circumstances when there is no popular Government in Mysore, it would not be proper to take any steps committing the Mysore Government. I hope you will therefore accept my sincere assurance of sympathetic understanding and intention to take steps to find a solution to this issue.

I am anxious to have this matter amicably settled without creating further bitterness. If you consider it desirable, we can meet and discuss this matter further.

Yours sincerely,
INDIRA GANDHI.

இந்தக் கடிதத்தை அவைமுன் வைக்கிறேன்.

THIRU K. T. K. THANGAMANI rose.

**MR. DEPUTY SPEAKER** : No discussion or question is allowed now.

**THIRU K. T. K. THANGAMANI** : Submission to the Chair can be made at any time.

**MR. DEPUTY SPEAKER** : I can allow it.

**THIRU K. T. K. THANGAMANI** : Sir, I do not want to say anything which will embarrass the Government. I would like to know whether any further details with regard to the budgetary provisions for the Mysore Government which will have to be voted by the Lok Sabha, have come to the notice of the Government. That is the only information that I would like to have now.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : அதுபற்றி பத்திரிக்கைகளிலே வந்திருக்கிற செய்திதான். நமக்கு எந்தவிதமான முழுத் தகவலும் வரவில்லை. நாடாளுமன்றத்தில் வரும்பொழுது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பிறகுதான் சொல்லப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : நிதிக் கோரிக்கைகள் மீது விவாதம் தொடர்ந்து நடைபெறும். அடுத்து திரு. காவேரி மணியம்.

## (3) 1971–72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**திரு. சொ. காவேரிமணியம்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கக்கூடிய மானியக் கோரிக்கையை வரவேற்று ஒருசில கருத்துக்களைக் கூற ஆசைப் படுகிறேன்.